# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2359/20 - 2023 නොවැම්බර් මස 22 වැනි බදාදා - 2023.11.22

*2359/20 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**அஞ்சல் அலுவலக சட்ட மூலத்தின் (190 ஆவது அதிகாரம்) 45 ஆவது அத்தியாயத்தின் கீழ் தயாரிக்கப்படும் விதிகள்**

2020.01.01 ஆந் திகதி தொடக்கம் 2020.12.31 ஆந் திகதி வரை வெளியிடப்பட்ட காசுக் கட்டளை

காசுக்கட்டளை செல்லுபடியானது, அது வழங்கப்பட்ட மாதத்தின் இறுதித் தினத்திலிருந்து 06 மாதங்கள் கால வரையறைக்காக மட்டுமே இருந்தபோதிலும் செல்லுபடியாகும் காலம் முடிந்து காசுக்கட்டளையின் விசேட நிலைமையைக் கவனத்தில் கொண்டு அது வழங்கப்பட்ட மாதத்தின் இறுதித் தினத்திலிருந்து இரண்டு வருடங்கள் வரை பணம் செலுத்துதல் பற்றி கவனத்தில் கொள்ளப்படுகிறது. இருந்தபோதிலும் வழங்கப்பட்ட மாதத்தின் இறுதித் தினத்திலிருந்து இரண்டு வருடங்களுக்கு அதிகமான காசுக் கட்டளைகளை மீண்டும் செல்லுபடியாகுவதற்கு அல்லது அதன் பெறுமதியை மீளச் செலுத்துவதற்கு முடியாதுள்ளது என்பதுடன் அந்தக் காசுக்கட்டளைகளின் பெறுமதியானது அரசின் வருமானத்துக்கு வரவு வைக்கப்படுகிறது.

2. அவ்வாறான நிலைமையிலும் பின்வரும் விசேட சந்தர்ப்பத்தின் கீழ் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காசுக் கட்டளைகளின் பெறுமதியில் உரிய கட்டணத்தை அறவிட்டதன் பின்னர் அரசின் வருமானத்திலிருந்து மீளச் செலுத்துதல் பற்றி கவனத்தில் கொள்ள முடியும்:

I. காசுக் கட்டளை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்திருத்தல் ;
II. சட்ட காரணத்தால் வீட்டு வாடகை கட்டுப்பாட்டுச் சபை மூலம் காசுக் கட்டளையைத் தேக்கி வைத்திருத்தல் ;
III. காசுக் கட்டளையின் பணம் கிடைக்க வேண்டியவர் வெளிநாட்டில் இருத்தல் (வெளிநாட்டுப் பயண கடவுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.);
IV. பணம் கிடைக்க வேண்டியவர் நீண்ட காலமாக கடும் சுகயீனம் காரணமாக நோயால் பாதிக்கப்பட்ட உடல் நிலையைக் கொண்டிருத்தல் (அரசாங்கத்தின் வைத்திய உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட வைத்தியச் சான்றிதழின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்).


1A - G 40810 — 07 (2023/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. மேற்படி 02(I) மற்றும் (II) இன் கீழ் உரிய காசுக் கட்டளை இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்க முடியாத பட்சத்தில் அவ்வாறான காசுக் கட்டளைகள் சம்பந்தமான விபரங்கள், உரிய வழக்கு இலக்கம் போன்றவைகளுடன் காசுக்கட்டளைச் சேவைக் கட்டுப்பாட்டாளருக்கு எழுத்து மூலம் அனுப்புதல் வேண்டும். காசுக் கட்டளை சமர்ப்பிப்பதற்கு அசௌகரியமாக இருந்தால் அது பற்றி எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

4. அதில் தற்பொழுது நீதிமன்றத்தில் காணப்படும் வழக்குக்காகவும் வேறு சட்டத் தேவைக்காகவும் நீதிமன்ற கட்டளை மூலம் தேக்கி வைக்கப்பட்டுள்ள காசுக் கட்டளைகள் வீட்டு வாடகை கட்டுப்பாட்டுச் சபை வழக்கு சம்பந்தமாக தேக்கி வைக்க வேண்டிய காசுக் கட்டளை, திணைக்கள மற்றும் அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று விசாரணைக்காக வைத்துக்கொள்ளப்பட்ட காசுக் கட்டளை இதன் மூலம் உள்ளடக்கப்படாது.

5. 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் 2020.12.31 ஆந் திகதி வரை வழங்கப்பட்ட காசுக் கட்டளைக்குரிய இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்கள் பூர்த்தியாகும் வரை கிடைக்கும் முறைப்பாடுகளை மட்டும் கவனத்திற் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது சாதாரண காசுக் கட்டளை, இலத்திரனியல் காசுக் கட்டளை, பெக்ஸ் காசுக் கட்டளை மற்றும் பெறுமதி செலுத்தி பாரம் எடுக்கும் காசுக் கட்டளைக்கும் பொருந்தும். 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தின் கீழ்க் காசுக் கட்டளைகளின் பெறுமதி அரச வருமானத்துக்கு வரவு வைக்கப்பட்டிருத்தல் அந்தக் காசுக் கட்டளைகளின் பெறுமதி நிதிப் பிரமாணத்திற்கு அமைய வருமானம் மீளச் செலுத்தல் என கவனத்தில் கொண்டு உரிய துறையினருக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

6. ஆகவே, மேற்படி 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காசுக் கட்டளைக்காக பணம் மீளச் செலுத்தல் சம்பந்தமாகவும் கவனத்திற் கொள்ளும் பொருட்டு எழுத்து மூலம் மேற்கொள்ளப்படும் வேண்டுகோள் மற்றும் உரிய காசுக் கட்டளையுடன் காசுக் கட்டணச் சேவைக் கட்டுப்பாட்டாளருக்கு பின்வரும் முகவரிக்கு இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும் என அந்த அந்த மாகாணங்களுக்கான உள்ளூராட்சி மன்ற வீட்டு வாடகை கட்டுப்பாட்டுச் சபை அரசின் நிறுவனங்கள், வங்கி, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுப்பாட்டாளர் (காசுக் கட்டளைச் சேவை),
காசுக் கட்டளைச் சேவைப் பிரிவு,
பிரதி அஞ்சல் அதிபதி (மத்திய) அலுவலகம்,
அஞ்சல் தொகுதி,
அஞ்சல் திணைக்களம்,
கண்டி.

7. ஆனால், 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் 2020.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் வழங்கப்பட்ட இந்த அறிவித்தலை இரண்டாவது பந்தியில் காணப்படும் விடயங்களுக்குரித்தான செல்லுபடியாகும் காலம் காலாவதியாகிய காசுக் கட்டளைகள் பணம் மீளச் செலுத்துமாறு இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்களின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனவும், காசுக் கட்டளைக்கான பணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது எனவும் இதன் மூலம் அறிவிக்கிறேன்.

8. 2020.01.01 ஆந் திகதிக்கு முன் வழங்கப்பட்ட எந்த ஒரு காசுக் கட்டளைகளும் எக்காரணம் கொண்டும் அல்லது வேண்டுகோளுக்காக பணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

**சாந்த பண்டார** (பா. உ.),
ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர்.

கொழும்பு,
2023, நவெம்பர் 22.

EOG 11-0219/1

## அஞ்சல் அலுவலக சட்டளைச் சட்டம்

*16 ஆவது அத்தியாயத்தின் கீழ் விதி*

*இலக்கம் 2301/58 மற்றும் 2022.10.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சரான எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமையவும் மற்றும் அஞ்சல் அலுவலக கட்டளைச் சட்டத்தின் (190 ஆவது அதிகாரம்) 16 ஆவது அத்தியாயத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட விதி.*

### விதி

*1928, யூலை மாதம் 13 ஆந் திகதிய 7,654 ஆம் இலக்கங் கொண்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முன்பு மேற்கொள்ளப்பட்ட திருத்தப்பட்ட அஞ்சல் முத்திரை மற்றும் முத்திரை ஒட்டப்பட்ட/அச்சிடப்பட்ட கடிதப் பொருட்கள் விற்பது சம்பந்தமான விதியானது கீழே காட்டப்பட்டவாறு மேலும் இதன் மூலம் திருத்தப்படுகிறது.*

*(1) அதில் 1 ஆவது விதியை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வரும் விதியைப் பதிலீடாக்குவதற்கு ;*

*"1. அஞ்சல் அதிபதிக்கு எந்த ஒரு நபருக்கும் ரூ. 110.00 பெறுமதியுடைய மற்றும் அதற்குக் குறைவான பெறுமதியைக் கொண்ட அஞ்சல் முத்திரை, முத்திரை ஒட்டப்பட்ட/அச்சிடப்பட்ட கடிதப் பொருட்களை விற்பனை செய்வதற்காக அனுமதிப்பத்திரத்தை விநியோகிக்க முடியும் என்பதுடன் அவ்வாறு விநியோகிக்கப்படும் எந்த ஒரு அனுமதிப்பத்திரத்தையும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இரத்துச் செய்ய முடியும்".*

*(2) அதில் 4 ஆவது விதியை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வரும் விதியை பதிலீடாக்குவதற்கு ;*

*"4. அனுமதிப்பத்திர உரிமையாளரால் 110.00 ரூபாவுக்குக் குறைவான அஞ்சல் முத்திரை அல்லது முத்திரை ஒட்டப்பட்ட/அச்சிடப்பட்ட கடிதப் பொருட்கள் ஒரு தடவை மொத்தப் பெறுமதி ரூபா 10,000.00 இற்கு அதிகரிக்காத பெறுமதி கொண்டதை அஞ்சல் அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்வதற்கு முடியும். அதில் அனுமதிப்பத்திர உரிமையாளருக்கு பெறுமதியில் 2% த்தை தரகுப் பணமாக வழங்க வேண்டும்."*

***சாந்த பண்டார*** *(பா. உ.),*
*ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர்.*

கொழும்பு,
*2023, நவெம்பர் 22.*

EOG *11-0219/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.